நாட்டுப்புற இலக்கியங்களில் பெண்ணிய அணுகுமுறைகளும் சிக்கல்களும்

ப. குளோரி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்:241210701016
வெ. ப.சு தமிழியல் ஆய்வு மையம்
ம. தி. தா இந்து கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

ஆ. ரந்தீர் குமார்
தமிழ்துறை
ம. தி. தா இந்து கல்லூரி, திருநெல்வேலி

முன்னுரை

நாட்டுப்புற இலக்கியத்தின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாக பதிந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதை குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும்.

நாட்டுப்புற இலக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் பெண்கள் பற்றிய தகவல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், பழமொழிகள் ஆகியவற்றில் பெண்களின் நிலை சமூக வாழ்வில் அவர்களின் முக்கியத்துவம் பெண்களைப் போற்றும் மற்றும் அவர்களை விமர்சிக்க செய்தவர் ,திருமணம் ,தாய் பாசம் ,துக்கம் போன்றவற்றில் அவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடு, பெண்களின் உரிமை, தேவை பற்றிய கருத்துக்கள், தொழில், சமூக கட்டுப்பாடு, நாட்டுப்புற இலக்கியத்தில் பெண்களின் நிலை மாற்றம், பெண்களின் போராட்டக் குரல்கள், கட்டுப்பாடுகள் போன்றவை இடம்பெறுகிறது.

நாட்டுப்புறப் பெண்கள் இயற்கை சார்ந்த வாழ்வியல், சமூகப் பிணைப்பு, கடுமையான உழைப்பு மற்றும் பாரம்பரிய விழுமியங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் ஆணாதிக்க சூழலிலும் குடும்பப் பொறுப்பு, சமூக சடங்குகள், மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டில் தீவிரமாக பங்கேற்பது, நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்துவது, மற்றும் சுற்றுச்சூழல் பெண்ணிய பார்வையில் இயற்கை வளங்களை நேசிப்பது இவர்களின் முக்கிய அணுகுமுறைகள் ஆகும்.

நாட்டுப்புறப் பெண்கள் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் பற்றாக்குறை, கடுமையான வீட்டு வேலைகளுடன் விவசாய கூலி வேலை, சமூகத்தில் ஆணாதிக்க மனப்பான்மை மற்றும் பொருளாதார சுதந்திரமின்மை போன்ற பன்முக சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். குடும்பப் பொறுப்புகளை சுமந்து கொண்டு குறைந்த ஊதியத்திற்கு போராடும் அவர்களின் நிலை இன்னும் ஆவலாகவே உள்ளது.

தீறவு சொற்கள்

அழகியல், பண்ணத்தி, மெய்வழக்கு, தெம்மாங்கு, கிராமப்புறங்களில், கட்டுக் கதை, கற்பு நெறி, இயற்கை சீற்றம், நேர்த்திக்கடன், தாய் தெய்வம்.

நாட்டுப்புற பாடல்கள்

நாட்டுப்புற மக்களில் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும்.

இவை மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்புடையது. இவைகள் எளிமையானவை, எழுதப்படாதவை, வாய் வழியாக பரவுபவை ஆகும்.

"பாட்டிடை கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே".

(தொல். சொல்.180)

என தொல்காப்பியர் "பண்ணத்தி" என ஒரு சொல்லின் இலக்கணத்தை விளக்கி கூறுகிறார். "பண்ணத்தி" என்ற சொல்லுக்கு "பண்ணை விரும்புவது" என்று பொருள். இப்பாட்டின் வரையறையில் பொருள் அமைந்திருக்கும். பேராசிரியர்பழம் பாட்டி நூறு கலந்த பொருளே தனக்கும் பொருளாக பாட்டும் உரையும் போல சொல்லப்படுவன பண்ணத்தி என்றவாறு உரை எழுதியுள்ளார். பின் மெய் வழக்கில்லாத புரவலக்கே பண்ணத்தி என்ற கருத்து உண்டு. தொல்காப்பியர் குறிப்பிடும் பண்ணத்தி இன்றைய நாட்டுப்புறப் பாடல்களை குறிக்கிறது எனலாம். நாட்டுப்புறப் பாடல்களை தாலாட்டு பாடல்கள், குழந்தைப் பாடல்கள், காதல் பாடல்கள், தெம்மாங்கு, தொழில் பாடல்கள், கொண்டாட்ட பாடல்கள், பக்தி பாடல்கள், ஒப்பாரி பாடல்கள் என பல வகைகளாக பகுக்கலாம். இந்தப் பாடல்கள் அனைத்தும் பெண்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது.

"நெல்லை சாயலை-குட்டி
இருபத்து நாலு முழமும்
சுத்துக்கு பத்த வேண்டு குட்டி
கண்றொளம் முஞ்சி யெல்லாம்"

இந்தப் பாடல்கள் பாடப்பட்ட காலத்தில் காவி சேலைக்கு நெல்லை பெயர் பெற்றிருப்பது தெரிய வருகிறது.

கதை கூறும் மரபு

பொதுவாக கதை கூறும் மரபு என்பது நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. நிகழ்ச்சிகளுடன் விவரிப்பு, கற்பனை, மக்களின் எண்ணங்கள் ஆகியவை இணைந்து கதை வடிவம் பெறுகிறது. தனது அனுபவங்களை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதன் மூலம் கதைகள் தோன்றின. அனுபவம், எடுத்துரைத்தல், முறை, கற்பனை இவைகளே நாட்டுப்புறக் கதைகள் உருவாக காரணமாக அமைகிறது. என கூறலாம். தமிழ் நாட்டுப்புறங்களில் பல்வேறு அமைப்புகளில் கதைகள் வழங்கி வரப்படுகிறது. பல கதைகள் ஒருவரே தெரிந்து வைத்துள்ளனர். தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் பாட்டிமார்கள் தங்களது பேரன், பேத்திகளுக்கு கதை சொல்லும் பழக்கம் இன்றும் உள்ளது. கதையைத் தெரிந்து வைத்திருப்பவர்கள் இரவு நேரங்களிலும், ஓய்வு நேரங்களிலும் கதைகளை சொல்வார்கள். வாய்மொழியாக கதை கூறுவதை தொல்காப்பியர் தன் பொருள் அதிகாரத்தில்,

"பொருள் மரபெல்லா பொய் மொழி ஆயினும்
பொருளோடு புணர்ந்த நகைமொழியாயினும்"

என தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். "பொருள் மரபில்லா பொய்யாமொழி" என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது பொருள் இல்லாத கட்டுக் கதைகள் ஆகும். "பொருளோடு புணர்ந்த நகைமொழி" என்பது பொருளுடன் நகைச்சுவையை எடுத்துரைக்கின்ற நாட்டுப்புறக் கதைகள் ஆகும். தொல்காப்பியர் நாட்டுப்புற கதைகளை பொருள் அடிப்படையில் இரண்டு வகைகளாக பிரித்துக் கூறியுள்ளார்.

நாட்டுப்புற இலக்கியத்தில் கற்பு நெறி

நாட்டுப்புற இலக்கியங்களில் பெண்கள் கற்பு நெறி இணை போற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர். பெண்கள் தான் திருமணம் செய்து கொள்ளும் மாமன் மகனையோ, அத்தை மகனையோ உறவாடினாலும் கருப்பு நெறி வழுவாமல் இருந்துள்ளனர் என்பதை

"மண் குடம் கொண்டு
மலையோரம் தண்ணிக்கு போகும் -மாமன்,
மகளே
உன் இரண்டு மண் குடத்தின்

விலை என்ன?
மண்குடம் போனால்
மறுகுடம் வாங்கலாம்
மானம் போனால்- மாமன் மகனே
உலகம் என்ன சொல்லும்"

என்ற நாட்டுப்புறப் பாடல், கற்பு என்பது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானது. ஆனால் அதனைக் காக்க வேண்டியது பெண்ணின் கடமை என்பதை மேலே உள்ள பாடல் வலியுறுத்துகிறது.

நாட்டுப்புறத் தொழில்கள்

நடவு நடுதல், அறுவடை, துணி துவைத்தல், சோதிடம் பார்த்தல், வியாபாரம், வளையல் விற்றல் போன்றவை நாட்டுப்புற தொழில்களாக குறிப்பிடப்படுகிறது.

பெண்களின் வாழ்க்கை பாத்திரங்கள்

பெண் என்பவள் பல கதாபாத்திரங்களாக மாறுபட்டுக் கொண்டே இருக்கிறாள். மகளாக, மனைவியாக, மருமகளாக, தாயாக என பல பாத்திரங்களை சுமக்கிறாள்.

மகள்

"ஆனை அடிச்சு வள
பெண்ணை பொத்தி வள"

என்ற பழமொழி அடித்து வளர்க்கப்படுவது ஆண் பிள்ளை என்றும், பெண் பிள்ளைகளை அடித்து வளர்ப்பது விரும்பத் தகாத சொல் என்றும் குறிப்பிடுகிறது.

தாய்

வணங்கத் தகுந்தவர்களாக சமுதாயத்தில் போற்றப்படுபவர்களில் தாய் என்பவள் முதல் இடத்தில் விளங்குகிறாள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் தாயே முதலிடம் வகிக்கிறாள். ஔவை "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறுகிறாள்.

"தாயைப் போல பிள்ளை
நூலைப்போல சேலை"

என்ற பழமொழி தாயை கொண்டு பிள்ளையை எடை போடுபவர் என்பதை விளக்குகிறது. ஒரு வீட்டில் திருமண உறவு கொள்வதற்கு முன் பெண்ணின் தாய் பற்றிய விளைவுகிறார்கள்.

மனைவி

குடும்ப விளக்காக விளங்குபவள் பெண் ஒவ்வொரு சிறந்த மனிதனுக்கு பின்னும் ஒரு பெண் இருப்பாள் என்ற கருத்து உண்டு. திருமணத்திற்குப் பின் கணவனே அவளின் உலகமாக இருக்க வேண்டும் என்ற கருத்து சமூகத்தில் உண்டு.

"கணவனே கண்கண்ட தெய்வம்". இந்தப் பழமொழி கணவன் எப்படி இருப்பினும் அதனை மனைவி பொறுத்துக் கொண்டுதான் வாழ வேண்டும். போற்றத்தக்கவன் கணவன் என்பதை வலியுறுத்தி கூறுகிறது.

நாட்டுப்புறப் பெண் தெய்வங்கள்

இயற்கையின் ஆற்றலுக்கு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்துக்கு ஆளாகாமல் இருக்கலாம். என நம்பிக்கை கொண்டான். அதன் அடிப்படையிலேயே இயற்கை வழிபாடுகளும், விழாக்களும் தோன்றின. தெய்வ வழிபாடுகளில் பெண் தெய்வங்களே அதிகம் இடம் பெறுகிறது. அதிலும் குறிப்பாக மாரியம்மனும், காளியம்மனும் மிகுந்த செல்வாக்கு பெற்றவர்கள் என்பதை நாட்டுப்புற பாடல்களின் மூலம் அறிய முடிகிறது. அம்மை, காலரா போன்ற நோய்களுக்கும் இந்த தெய்வங்கள் தான் காரணம் என கருதுகின்றனர். இந்த தெய்வங்களை வழிபடுவதன் மூலம் அக்கினி நீங்குவதாக மக்களால் நம்பப்படுகிறது.

மாரியம்மன் வழிபாடு

மகாகவி பாரதி தன்னுடைய பாடலில்,

"உலகத்து நாயகியே -எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி"

என மாரியவனை பற்றி புகழ்ந்து பாடியுள்ளார். ஆயிரம் கண்ணுடையவள் மாரியம்மன் என்றும் கண்பார்வையை

கொடுக்கும் ஆற்றலும் மீண்டும் கண் பார்வையை கெடுக்கும் ஆற்றலும் மாரியம்மனுக்கு உண்டு என நம்பினர். மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் இருந்தால் அதை உடனே செய்து முடித்து விடுவர். கண் நோயாளிகளின் பார்வையை சரி செய்ய வேண்டும் என வெற்றி கண் செய்து வைப்பர். விரதம் இருந்து தீ மிதிப்பர். தீச்சட்டி எடுத்து நேர்த்தி கடன் செய்வார்கள். திருவிழா காலத்தில் கரகம் எடுத்துக்கொண்டு ஊரை சுற்றி வருவார்கள். பச்சரிசியுடன் வெள்ளம் சேர்த்து மா விளக்கு ஏற்றுவர். அதனைப் பிரசாதமாக உண்பார்கள். மழை பெய்யவும் மாரியம்மனை வேண்டினார்கள் என்பதை,

"மாரி என்றால் மழை பொழியும்
தேவி என்றால் தேன் சொரியும்"

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

காளியம்மன் வழிபாடு

மாரியம்மன் போன்ற காளியம்மன் மீதும் மக்கள் நிறைந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். காளியம்மனை ஆத்தா மற்றும் அம்மா என அழைத்து வணங்குகின்றனர். குலவை பாடல் ஒன்று பெண் ஒருத்தி காளியம்மனை வழிபாடு செய்ததை,

"ஆத்தங்கரை ஓரம்
ஆவப் படர்ந்து இருக்க
ஆவக்கொடி சோலையில்
காளியாய் அழகு பிள்ளை"

என்ன பக்தியுடன் பாடி வணங்குகிறாள்.

நாட்டுப்புறப் பெண்களின் முக்கிய அணுகு முறைகள்

பண்பாடு மற்றும் சமூக உறவுகள்

குடும்ப சடங்குகள் (பூப்புச்சடங்கு, தாலாட்டு) விரும்பி கடைப்பிடித்தல் மற்றும் உறவினர்களுடன் நெருங்கிய பிணைப்பை கொண்டிருத்தல்.

பொருளாதார உழைப்பு

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மற்றும் சிறு தொழில்கள் மூலம் குடும்ப பொருளாதாரத்திற்கு பங்களித்தல்.

சுற்றுச்சூழல் பெண்ணியம்

இயற்கையோடு இணைந்து வாழ்தல், நீர் மற்றும் நில வளங்களை பாதுகாத்தல்.

வழக்காறுகள் வழி வெளிப்பாடு

நாட்டுப்புற பாடல்கள், கதைகள் மூலம் தங்கள் உணர்வுகள், ஆக்கங்கள் மற்றும் சமூகப் பிரச்சினைகளை பதிவு செய்தல்.

பாரம்பரியம் சார்ந்த அடக்கம்

பொதுவாக ஆணாதிக்க சூழலில் வளர்ந்தாலும் தங்களுக்குள் ஒரு வலிமையான சமூக வலை பின்னலை வைத்திருத்தல்.

மாற்றத்தை நோக்கி

கல்வி அறிவு மற்றும் நவீன சலுகைகள் மூலம் பாரம்பரிய கட்டமைப்பிலிருந்து மாறி தங்களின் உரிமைகளை குறித்து விழிப்புணர்வு அடைதல்.

முக்கிய சிக்கல்கள்

பொருளாதாரச் சார்பு

பல நாட்டுப்புறப் பெண்கள் தங்களின் சொத்துரிமை மற்றும் நிதி முடிவுகளை எடுக்கும் அதிகாரம் இல்லாமல் ஆண்களைச் சார்ந்து வாழ்கின்றனர்.

கல்வி மற்றும் சுகாதார பற்றாக்குறை

முறையான கல்வி வாய்ப்புகள் மற்றும் சுகாதார விழிப்புணர்வு, மருத்துவ வசதிகள் குறைவு.

கடுமையான உழைப்பு

வீட்டு வேலைகளையும் தாண்டி, விடியற்காலை முதல் கடும் உழைப்பு, விவசாயக் கூலி வேலைகளை பெண்கள் செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கு சரியான அங்கீகாரம் கிடைப்பதில்லை.

ஆணாதிக்க சமூக அமைப்பு

பெண் தாழ்ந்தவள், ஆண் உயர்ந்தவன் என்ற மனப்பான்மை குடும்ப வன்முறை மற்றும் பாலின பாகுபாடு.

சமூக கட்டுப்பாடுகள்

கலாச்சார பெயரில் விதிக்கப்படும் சமூக அங்கீகாரம் இல்லாமை போன்ற பிரச்சனைகள்.

முடிவுரை

நாட்டுப்புற இலக்கியத்தில் பெண்கள் அவர்களின் வாழ்வியல் நிலையை பிரதிபலிக்கும் விதத்தில் முக்கியமான அங்கமாக அமைகின்றனர். பெண்ணின் நிலைகள் அவர்களுக்கான மரியாதை அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஆகியவை நாட்டுப்புற இலக்கியத்தின் மூலம் நம் பாரம்பரியத்திலும், கலாச்சாரத்திலும் இடம்பெறுகிறது. நாட்டுப்புற இலக்கியத்தில் பெண்கள் உயிர் உடையவனாக ஒரு அங்கமாக திகழ்கின்றார்கள்.

நாட்டுப்புறப் பெண்கள் சமூகத்தின் முதுகெலும்பாக திகழ்வதுடன் அவர்களின் அணுகுமுறைகள் தனித்துவம் மிக்கதாகவும், மண்ணின் மனதோடு ஒன்றிணைந்தவர் களாகவும் உள்ளனர்.

இந்த சவால்களுக்கு மத்தியில் தங்களின் உழைப்பால் குடும்பத்தை வழி நடத்துபவர்களாக நாட்டுப்புறப் பெண்கள் திகழ்கின்றனர்.

துணைநூற்பட்டியல்கள்

1. *நாட்டுப்புற இலக்கியம்-மயிலவேலன் பதிப்பகம் .*
2. *நாட்டுப்புற இலக்கியங்களின் உள் பகுப்பாய்வு - மணிவாசகர் பதிப்பகம்.*
3. *நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம்-பாவை பப்ளிகேஷன். ஈஸ்வரன். ச.*
4. *நாட்டுப்புறவியல் கட்டுரைகள். - சுப்பிரமணியன். பெ.*
5. *நாட்டுப்புறப் பாடல்கள்-ஜெகநாதன். கி. வா.*
6. *நாட்டுப்புற பழமொழிகள் - சேதுராமன். பி.*